# அரையாண்டுத் தேர்வு - 2024

## கணினி அறிவியல்

**11 ஆம் வகுப்பு**

நேரம் 3.00 மணி

மொத்த மதிப்பெண்கள் 70

பகுதி - I

15×1=15

குறிப்பு 1 ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 2) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளின் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. ஏ.டி.எம் இயந்திரங்களில், கீழ்க்கண்டவற்றுள் எது பயன்படுத்தப் படுகிறது?
   (அ) தொடுதிரை (ஆ) திரையகம் (இ) ஒலி பெருக்கி (ஈ) அச்சுப்பொறி
2. ஒரு கிலோ பைட் என்பது எத்தனை பைட்டுகளைக் கொண்டது?
   (அ) 1000 (ஆ) 8 (இ) 4 (ஈ) 1024
3. பின்வரும் எந்த இயக்க அமைப்பில் வணிக ரீதியாக உரிமம் பெற்ற இயக்க அமைப்பு ஆகும்?
   (அ) விண்டோஸ் (ஆ) உபுண்டு (இ) பெடோரா (ஈ) ரெட்ஹெட்
4. சாளரங்களில் ஒரு கோப்பின் மறுபெயரிட பயன்படுத்தப்படும் குறுக்குவழி விசை
   (அ) F2 (ஆ) F4 (இ) F5 (ஈ) F6
5. பணிக்குத் தகுதியற்ற விவரங்களைத் தவிர்த்து, அவசியமானவற்றை மட்டுமே குறிக்கும் பணியின் அம்சங்கள்என அழைக்கப்படுவது எது?
   (அ) விவரக்குறிப்பு (ஆ) அருவமாக்கம் (இ) ஒருங்கினைத்தல் (ஈ) பிரித்தல்
6. C++ -யை உருவாக்கியவர் யார்?
   (அ) சார்லஸ் பாபேஜ் (ஆ) ஜேர்ன் ஸ்ட்ரௌஸ்ட்ரப் (இ) பில் கேட்ஸ் (ஈ) சுந்தர் பிச்சை
7. பல வழி கிளைப் பிரிப்புக் கூற்று: (அ) if (ஆ) if ... else (இ) switch (ஈ) for
8. நிரலின் செயலாக்கம் எந்த செயற்கூறிலிருந்து தொடங்கும்?
   (அ) isalpha( ) (ஆ) isdigit( ) (இ) main( ) (ஈ) islower( )
9. சரங்கள் தானமைவாக இவற்றுள் எந்த குறியுருவுடன் முடிவடையும்?
   (அ) \0 (ஆ) \t (இ) \n (ஈ) \b
10. "ஒருமுறை எழுதுதல் பலமுறை பயன்படுத்துதல் "- அதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது?
    (அ)தரவு மிகைமை (ஆ) மறுபயனாக்கம் (இ) மாற்றம் (ஈ)தொகுத்தல்
11. இனக்குழுவுக்குள் வரையறுக்கப்படும் செயற்கூறுகள் எந்த செயற்கூறுகளைப் போல் இயங்குகின்றன? (அ) inline செயற்கூறுகள் (ஆ) inline அல்லாத செயற்கூறுகள்
    (இ) Outline செயற்கூறுகள் (ஈ) தரவு செயற்கூறு
12. பின்வருவனவற்றுள், எது நிரலின் ஒப்பீடுகளின் எண்ணிக்கையை குறைக்கிறது ?
    (அ) செயற்கூறு பணிமிகுப்பு (ஆ) செயற்பாடு பணிமிகுப்பு
    (இ) செயற்குறு பணிமிகுப்பு (ஈ) உறுப்பு பணிமிகுப்பு
13. பின்வருவனவற்றுள் எது மரபுரிமம் பெற்ற வரிசையில் இயக்கப்படுகிறது?
    (அ) அழிப்பி (ஆ) உறுப்பு செயற்கூறு (இ) ஆக்கி (ஈ) பொருள்
14. கீழ்கண்டவற்றுள் எது கணிப்பொறி நிரல்களின் தேவையில்லாமல் தானே பெருக்கிக் கொள்ளவும் மற்றும் இணைத்துக் கொள்ளவும் செய்யும்?
    (அ) நச்சுநிரல் (ஆ) வார்ம்ஸ் (இ) ஸ்லைவேர் (ஈ) ட்ரோஜன்
15. ஒற்றை பக்க மற்றும் ஒற்றை அடுக்கு 12 செ.மீ விட்டம் உள்ள DVD-யின் மொத்த கொள்ளளவு எவ்வளவு? (அ) 4.7 GB (ஆ) 5.5 GB (இ) 7.8GB (ஈ) 2.2 GB

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## பகுதி-II

எவையேனும் 6-க்கு விடையளிக்கவும் கேள்வி எண்.24 கட்டாயம். 6x2=12

16. மையச் செயலகத்தின் (CPU) பகுதிகள் யாவை?
17. அறிவுறுத்தல் என்றால் என்ன?
18. பல் பணியாக்கம் என்றால் என்ன?
19. Save மற்றும் Save As-க்கு உள்ள வேறுபாடு யாது?
20. வில்லைகள் என்றால் என்ன? C++ -ல் உள்ள வில்லைகளை கூறுக.
21. if கூற்றுடன், ?: மும்மசெயற்குறியை ஒப்பிடுக.
22. void தரவு வகையின் முக்கியத்துவங்கள் என்ன?
23. பணிமிகுக்க முடியாத செயற்குறிகளைப் பட்டியலிடுக.
24. கிராக்கிங்சிறு குறிப்பு வரைக.

## பகுதி-III

எவையேனும் 6-க்கு விடையளிக்கவும் கேள்வி எண்.33 கட்டாயம். 6x3=18

25. மறுசுழற்சி பெட்டியை பற்றி ஒரு குறிப்பு வரைக.
26. main செயற்கூற்றின் சிறப்பு யாது.?
27. switch கூற்றின் கட்டளை தொடரை எழுதி அதன் பயன்களை பட்டியலிடுக.
28. செயற்கூறு முன்வடிவம் நிரல்பெயர்ப்பிக்கு எந்த தகவலை வழங்கும்?
29. அணி என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.
30. செயற்கூறு பணிமிகுப்பிற்கான விதிமுறைகள் யாவை?
31. ஓர் இனக்குழுவை தருவிக்கும்போது, கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?
32. குறியாக்கம் மற்றும் மறைகுறியாக்கம் பற்றி எழுதுக.
33. பின்வரும் c++ நிரலின் வெளியீட்டைஎழுதுக.

```
#include<iostream>
using namespace std;
int x=45;
int main()
{
int x = 10;
cout << "\nValue of global x is " << ::x;
cout << "\n\nValue of local x is " << x;
return 0;
}
```

## பகுதி-III

5X5=25

அனைத்து வினாக்களுக்கு விடையளி:

34. கணிப்பொறியின் பல்வேறு தலைமுறைகளை விளக்குக. (அல்லது)
பின்வரும் எண்களை மாற்றுக.
(i) $(126)_{10}=(\quad)_2$ (ii) $(11010110)_2=(\quad)_8$ (iii) $(111011)_2=(\quad)_{10}$
(iv) $(6213)_8=(\quad)_2$ (v) $(25F)_{16}=(\quad)_{10}$
35. நுண்செயலியின் பண்பு கூறுகளை விளக்குக. (அல்லது)
ஒரு இயக்க முறைமைக்கான பயனர் இடைமுகத்தை உருவாக்கும் போது கவனத்தில் கொள்ளமுக்கிய கருத்துக்களை பட்டியலிடுக.
36. விண்டோஸ் இயக்க அமைப்பின் பலவகையான பதிப்புகளை விவரி. (அல்லது)
நுழைவு சோதிப்பு மடக்கு என்றால் என்ன? ஏதேனும் ஒரு நுழைவு சோதிப்பு மடக்கை பொருத்தமான எடுத்துக்காட்டுடன் விளக்குக.
37. மாறியின் வரையெல்லை விதிமுறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது)
பொருள் நோக்கு நிரலாக்கத்தை ஆதரிக்கும் அடிப்படைக் கருத்துகளைப் பற்றி குறிப்பு வரைக.
38. ஆக்கி, அழிப்பி – வேறுபாடு தருக. (அல்லது) மரபுரிமத்தின் பல்வேறு வகைகளை விவரி.

*HSK – 11-CS TM -2*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com